Registered as a Newspaper

London Exams
Nov / Dec. 1987
★ ஆரம்பமாகிவிட்டன ★
C. I. M A. — Stage I
(I. C. M. A.)
A A. T. —
PRELIM & INTER
தகுதியான பிரபல விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14. St. Peter's Lane,
JAFFNA,

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

London Exams
Nov. Dec. 1987
C. I. M. A.-Stage II, III
I. D. P. M. - Part I
புதிய வகுப்புகள்
10-7-87 முதல்
ஆரம்பமாகவுள்ளன.
Result Oriental Institute
in North.
NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane,
JAFFNA.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ளூ ஆனி மீ 25 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஃ பிறை 12 (09 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 192

# தேடுதல், சுற்றிவளைப்பு கிழக்கில் மீண்டும் தீவிரம்

## ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

கொக்குவில், ஜூலை 9

நீண்ட கால இடைவெளியின் பின் நேற்று யாழ்நகர் பகுதியில் ஹெலியில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

கொக்குவில் பகுதிகளில் விழுந்த இத் துண்டுப் பிரசுரங்களில் ''பையன்களை இராணுவத்தினரிடம் சரணடையும்படி'' பெரிய எழுத்துக்களில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ–69)

## நகரில் ஷெல், வேட்டு; எட்டுப் பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். கோட்டை முகாமில் இருந்து நேற்று ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் எட்டுப் பேர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை முதல் இரவுவரை விட்டுவிட்டு ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கொட்டடி, பண்ணைப் பகுதிகளில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

சின்னக்கடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் இரண்டு பேர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

எல். வள்ளி(வயது66), க. இராசதுரை(வயது57) ஆகிய இருவருமே யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டவர்களாவர். (உ–10)

## வ.பி.போ.ச. ஊழியர் 2 பேர் மதவாச்சியில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் டிப்போவில் கடமையாற்றும் இரண்டு ஊழியர்கள் மதவாச்சியில் வைத்து கடந்த செவ்வாயன்று பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

பஸ்களுக்கு டீசல் எடுக்கச் சென்றபோதே பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலீஸ்விசாரணையையடுத்து ஒருவர் விடுதலை செய்யப்பட்டதாகவும்– மற்றவர் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (உ–10)

## பெரும் தாக்குதலுக்கு அரசு முஸ்தீபு?

### 'ஐலண்ட்' நாளிதழ் கூறுகிறது

கொழும்பு, ஜூலை 9

நெல்லியடி முகாம் தாக்குதலைத்தொடர்ந்து பாதுகாப்புப் படைகள் பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு முஸ்தீபுகள் மேற்கொண்டு வருவதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் கூறுவதாக கொழும்பு 'ஐலண்ட்' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புப்படைகள் மிக அவதானமாக இது விஷயத்தில் ஈடுபடுவதாக அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

தீவிரவாதிகள் நெல்லியடி முகாம் மீது நடத்திய தாக்குதலின் பின்னர், துருப்புக்கள் நடமாட்டம், யுத்த உத்திகள் பற்றி எதுவுமே சொல்லாமல்பாதுகாப்பு வட்டாரங்கள் தீவிர மௌனம் சாதித்து வருகின்றன.

– இப்படி 'ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கின்றது. (உ–எ)

## தொண்டமனாறில் நேற்று கடுஞ் சமர்

### போராளி ஒருவர் வீரமரணம்

வடமராட்சி, ஜூலை 9

தொண்டமனாறு இராணுவ முகாம் பகுதியில் நேற்று மாலை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும்மோதல் நிகழ்ந்தது.

இச்சம்பவத்தில் போராளி ஒருவரும் நான்கு சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

நேற்று மாலை 4–30 மணியளவில் நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறி, மக்கள் குடியிருப்புகளை நோக்கி முன்னேற முயன்ற சமயம் இம்மோதல் நிகழ்ந்தது.

அப்பகுதியில்'சென்றி' நிலைகளை அமைத்து தயார் நிலையில் இருந்த விடுதலைப் புலிகள் அவர்களை எதிர்த்து சுமார் ஒருமணிநேரம் சமர் புரிந்தனர்.

புலிகளின் தாக்குதலையடுத்து இழப்புகளுடன் இராணுவம் பின்வாங்கிச் சென்றது.

புலிகள் தரப்பில்கோப்பாயைச் சேர்ந்த வசந்தன் என்ற போராளியே வீரமரணமடைந்தார். (உ–10–160)

## தரை, கடலால் சென்று கிராமங்களில் அட்டகாசம்

### மூதூரில் 10 பேர் பலியாகினர்

யாழ்ப்பாணம், ஜூலை 9

கிழக்கில் தேடுதல், சுற்றிவளைப்பு ஆகிய இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் தீவிரமாக்கப்பட்டுள்ளன

படையினர் தரையாலும் கடலாலும் பெரும் எண்ணிக்கையில் சென்று கிராமங்களைச் சுற்றிவளைத்துப் பெரும் அட்டகாசங்கள் புரிவதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

தேடுதல் சுற்றிவளைப்புச் சம்பவம் ஒன்றின்போது, கடந்த செவ்வாய்க்கிழமை மூதூரில் மட்டும் பத்துப் பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதாகவும் அறியவந்துள்ளது.

கிழக்கில் தேடுதல், சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் சிலகாலமாகக் குறைந்திருந்தன. ஆனால் இப்போது அவை மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

குறிப்பாகத் திருமலை மாவட்டத்தில் தேடுதலும் சுற்றி வளைப்பும் அதிகரித்துள்ளன.

ஆயுதப்படையினர் ஒரே நேரத்தில் தரையாலும், கடலாலும் குறிப்பிட்ட கிராமங்களுக்குள் ஆயிரக்கணக்கில் புகுந்து பெரும் அட்டகாசம் புரிகின்றனர். தேடுதல் என்ற பெயரில் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர். பலரைக் கைது செய்கின்றனர்.

திருகோணமலைமாவட்டம் மூதூர்ப் பகுதியில் செவ்வாய்க்கிழமை இராணுவம் நடத்திய தேடுதல் வேட்டையின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கன்பொல்லை, கலிகை, துன்னாலையில் அகற்றப்படாமல் கிடக்கும் சடலங்கள்

வடமராட்சி, ஜூலை 9

கன்பொல்லை, கலிகை, துன்னாலை ஆகிய பகுதிகளில் செவ்வாய்க்கிழமை நடந்த மோதலின்போது கொல்லப்பட்ட ஆயுதப்படையினர் மற்றும் பொதுமக்களின் சடலங்கள் அகற்றப்படாமல் அப்படியே கிடக்கின்றன.

சடலங்களை அகற்றுவதற்கு எவரும் முன்வராத நிலையில் அவை வீதிகளில் கிடப்பதாக வடமராட்சியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை கலிகைச் சந்தியில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 7 படையினர் கொல்லப்பட்டனர் என்பதும்—

சில பொதுமக்களும் உயிரிழந்தனர் என்பதும் தெரிந்ததே. (உ–160)

### சுபநேரம்

09-07-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:–
7 28முதல் 8 58வரை
ராகுகாலம்:–
1.28 முதல் 2.58 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பவித்திர சதுர்த்தசி

## வல்லை வெளியூடாக போக்குவரத்து!

வடமராட்சி, ஜூலை 9

வல்லைவெளியூடான போக்குவரத்துகள் நேற்று ஓரளவு வழமைக்குத் திரும்பின.

மக்கள் வாகனங்களிலும், சைக்கிள்களிலும், வண்டில்களிலும் அவ்வழியூடாகப் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கைகளை அடுத்து வல்லைவெளியூடான போக்குவரத்துகள் யாவும் துண்டிக்கப்பட்டன என்பதும் —

அவ்வழியே போகும் வாகனங்கள் மீது ஹெலியிலிருந்து தொடர்ந்து தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன என்பதும் தெரிந்ததே.

ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட இத்தகைய தாக்குதல் ஒன்றில் வல்லைப் பாலம் சேதமுற்றதை அடுத்து போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

தற்போது பொதுமக்களே இந்தப் பாலத்தை ஓரளவு சீர் செய்து பாதையை பாவனைக்கு ஏற்றதாக மாற்றியிருக்கின்றனர். (உ–160)

### முச்சந்தி முரளி



கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர் வானம் ஏறி வைகுண்டம் போன கதை சொல்லுமுரோ உவர்...?

## நாவற்குழியிலும் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 9

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நேற்று இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக இரண்டு பேர் காயமடைந்ததுடன் சில வீடுகளும் சேதமடைந்தன. (உ–10)

## 4 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

கடந்த இரு நாட்களாக படையினருடன் தாம் நடத்திய நேரடி மோதலில் நரேஸ், தியாகு, மகான், வசந்தன் ஆகிய நான்கு புலிகளும் வீரமரணமடைந்ததாக புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி புலிகள் அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர். (உ)

## ★ வவுனியாவில் தேடுதலுக்குஹெலியை நாடும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வவுனியாப் பகுதியில் தற்போது ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு படையினர் ஹெலிக்கொப்டர்களை அதிகம் உபயோகிக்கின்றனர்.

தேடுதல் நடத்த வேண்டிய இடங்களுக்கு கவச வாகனங்களிலும், கால் நடையாகவும் சென்ற இராணுவத்தினர் தற்பொழுது ஹெலிக்கொப்டர்களில் வந்துவெளியானஇடங்களில் இறங்கி நகருக்குள் பிரவேசித்து சோதனைகளை மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து ஆயுதங்களை பெறும் நிலையில் தீவிரவாதிகள்

### கொழும்பு அவதானிகள் திகைப்பு

கொழும்பு, ஜூலை 9

தொடர்ந்தும் ஆயுதங்கள், வெடி மருந்துகளைப் பெறக்கூடிய நிலையில் யாழ் குடாநாட்டுத் தீவிரவாதிகள் இருப்பது குறித்து கொழும்புஇராணுவ அவதானிகள் திகைப்படைந்து உள்ளனர்.

நெல்லியடி இராணுவ முகாம்மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்துதான் இராணுவ அவதானிகள் குழப்பம் அடைந்துள்ளனர் என்று அரசு சார்புப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' நேற்று செய்தி வெளியிட்டது.

வடமராட்சி இராணுவ நடவடிக்கையின்போது தீவிரவாதிகளின் ஆயுதக் கிடங்குகள் சேதப்படுத்தப் பட்டன.

இருந்தும் நெல்லியடி இராணுவ முகாம்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தீவிரவாதிகள்மழை போன்று ரொக்கட், கிரனேட்டுகள் மற்றும் துப்பாக்கிக் குண்டுகளைப் பாவித்தனர்.

தீவிரவாதிகள் ஆயுதங்களைப் பெறும் பிரதான விநியோக வழி பாதிக்கப்படவில்லை என்பதை இதுகாட்டுகின்றது.

ஸ்ரீலங்காவின் கடற்பிராந்தியக் கண்காணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு மிக விரைவில் தமது கட்டுப்பாட்டிலாம்

### லலித்தின் உறுதி

கொழும்பு, ஜூலை 9

மிக விரைவில் யாழ் குடாநாடு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

– இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

எவ்வளவு அவசரமாக இருந்தும் கேள்விப்பத்திரங்களைக் கோரிய பின்னரே ஆயுதங்கள் வாங்கப்படுகின்றன.

### பலப்படுத்துகிறோம்

இராணுவத்தைப் பலப்படுத்தும் வேலைகளை அரசு எடுத்து வருகின்றது.

இருந்தாலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியை அரசு கைவிட்டுவிடவில்லை.

ஆயுதப்படை, பொலீஸ் படை ஆகியவற்றுக்கு மேலதிக நிதி கோரியே இந்த உபமான்யப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

வெறும் ஆயுதப்படை மட்டும் இந்நிதியினால் பயன் அடையப்போவதில்லை; குடிமக்களும் பயன் அடைவர்.

### வடபகுதி மீனவருக்கு

வடபகுதி மீனவருக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உண்மையை அறிய வருமாறு விடுக்கப்படும் ஸ்ரீலங்கா அரசின் அழைப்புக்கு இந்தியா இனி செவிசாய்க்காது

கொழும்பு, ஜூலை 9

தமிழ்ப் பகுதிகளில் இடம் பெறும் சம்பவங்கள் பற்றிய உண்மை நிலையை அறிய ஸ்ரீலங்கா அரசு விடுக்கும் எந்த அழைப்புக்கும் இந்திய அரசு இனி செவிசாய்க்காது.

– இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் தெரிவித்திருக்கின்றார்.

மட்டக்களப்பு, கள்ளிமடு பிள்ளையார் கோயில் திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களில் 17 பேரை அதிரடிப்படையினர் சுட்டுக் கொன்ற பின்னர் அவர்களின் சடலங்களை எரித்ததாகக் கூறப்படும் சம்பவம் பற்றி இந்தியத் தூதர், கொழும்பு அரசு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அதைத் தொடர்ந்து உண்மை நிலையை அறிய வரும்படி ஸ்ரீ லங்கா அரசு இந்தியத் தூதரக பாதுகாப்பு அதிகாரிக்கு அழைப்பு விடுத்தது.

அதை ஏற்று பாதுகாப்பதிகாரி கப்டன் குப்தா கடந்த செவ்வாய் மட்டக்களப்பு சென்றார்.

அங்கு சுதந்திரமான

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை: வடமராட்சிப் பகுதி பரீட்சார்த்திகளுக்கு இன்னொரு சந்தர்ப்பம்

கொழும்பு, ஜூலை 9

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை எடுக்க வடமராட்சி மாணவர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஆனால் இம்முறை பரீட்சை எடுக்காததற்கு, தகுந்த காரணங்களை அப்பரீட்சார்த்திகள் காட்டவேண்டும்.

— இப்படி பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்மாதம் 15ஆம் திகதி ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகும்.

சுமார் 1 லட்சத்து 35 ஆயிரம் மாணவர் இப் பரீட்சை எடுக்கின்றனர்.

ஆகஸ்ட் 20ஆம் திகதியுடன் பரீட்சை முடிவடையும். (உ–எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### மீண்டும் வின்செண்ட்டை நியமிக்க முடிவு?

கொழும்பு, ஜூலை 9
கொழும்பு வடக்கு எம்பியாக மீண்டும் திரு. வின்சன்ட் பெரெராவையே நியமிப்பது என்று ஐ. தே. க. தலைமைப் பீடம் முடிவெடுத்துள்ளதாம்.

அமைச்சர், எம். பி. பதவிகளை திரு. வின்சன்ட் பெரெரா ராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

ராஜினாமாவை வாபஸ் வாங்கும்படி கோரி கொழும்பு வடக்கு எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'வின்சன்டே எமக்கு வேண்டும்' - இப்படி சுவரொட்டிகள் வலியுறுத்துகின்றன. (உ-எ)

# வலிகாமம் வடக்கில் தபால் சேவை சீர்குலைவு

காங்கேசன்துறை, ஜூலை 9
வலி. வடக்குப் பகுதியில் தபால் சேவைகள் பெரிதும் சீர்குலைந்துள்ளன.

தெல்லிப்பழை, காங்கேசன்துறை தபால் நிலையங்கள் முறையே தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலுக்கு சமீபமாகவும், சுன்னாகத்திற்கும் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஊறணி, தையிட்டி, கீரிமலை, மாவிட்டபுரம், குரும்பசிட்டி, கட்டுவன் போன்ற பல உபதபால் நிலையங்கள் இயங்க முடியாமல் உள்ளன.

அத்துடன் பொதுமக்கள் தமது வீடுகளை விட்டு அகதிகளாக வெளியேறி பல இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இதன் காரணமாக இப்பகுதியில் தபால் சேவைகள் பெரிதும் சீர் குலைந்துள்ளன. (இ-68)

### சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜூலை 9
மாதுறுஓயாவில் உள்ள மகாவலி அபிவிருத்தி வேலைத் தளத்தில் ஒரு ஊழியர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் வேறு இரண்டு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இது சம்பந்தமாக ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார். (இ-எ)

### நயினையில் அன்னதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு வழமை போல் இம் முறையும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் அமுதசுரபி மண்டபத்தில் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

அன்னதானத்துக்கு உதவ விரும்பும் அடியார்கள், அன்பர்கள் நயினை அமுதசுரபி மண்டபத்தில் அல்லது இல: 54 பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள சபையின் பொருளாளருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (இ)

## ★ செய்திக்கொத்து ★

### சங்கானையில் உணவு முத்திரை

சங்கானை, ஜூலை 9
சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 18 கிராம சேவகர் பிரிவுகளிலும், உணவு முத்திரைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் துரிதமாக நடைபெறுகின்றன. (இ-ரி)

### கிராமசேவகர் பயிற்சி

சாவகச்சேரி, ஜூலை 29
சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 23 கிராமசேவகர்கள் பகுதிகள் 35 ஆகப் பிரிக்கப்பட்டதால் கூடுதலான 12 பிரிவுகளுக்கும் இப்பகுதியில் கடமையாற்றிய விசேஷசேவை அலுவலர்கள் கிராம சேவகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் 14ஆம், 15ஆம், 16ம் திகதிகளில் யாழ் கச்சேரியில் வழங்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது. (இ-31)

### பிரார்த்தனையும் விசேட பூசையும்

கொச்குவில், ஜூலை 9
அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூகநிலைய ஸ்தாபனத் தலைவரும் சிறந்த சிந்தனையாளருமாகிய செம்மல் நீ. செல்லக்கண்டுவின் 5ஆவதுசிரார்த்த தினத்தை முன்னிட்டு அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்மாள் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் விசேஷ பூசையும் நடைபெற்றன. (இ-69)

### பாலர்கல்வி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 9
பௌர்ணமிதினபாலர் கல்விக் கருத்தரங்குத் தொடரில் ஐந்தாவது கருத்தரங்குநாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமையில் நடைபெறும். (இ-69)

# தெல்லிப்பளைப்பகுதியில் பணிமனைகள் இடமாற்றம்

பலாலி, ஜூலை 9
தெல்லிப்பளையில் இயங்கி வந்த அரச கூட்டுறவுச் சங்கத்தின் பல பணிமனைகள் அவசர அவசரமாக இடம்மாற்றப்படுகின்றன.

மாவிட்டபுரம் மினிமுகாமில் இருந்து அடிக்கடி ஷெல் ஏவப்படுவதுடன், இராணுவம்தெல்லிப்பளையைநோக்கிவரக் கூடும்என்றபீதியுமே இப் பணிமனைகள் இடம்மாற்றப்படக் காரணமாகும்.

காங்கேசன்துறை மத்திய மருந்தகம் மல்லாகம் சந்திக்கு அண்மையிலுள்ள ஒரு இடத்திலும், மாவட்ட அபிவிருத்திச்சபையின் தெல்லிப்பளை உப அலுவலகம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அண்மையாகவும், உதவி அரசாங்க அதிபர் பணிமனை மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்திலும், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கப் பணிமனை அளவெட்டிக்கும், தெல்லிப்பளைத்தபாலகம்துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அண்மையிலும் இடம் மாற்றப்பட்டுள்ளன.

இவற்றுடன் ஏனைய பல வியாபார நிலையங்களும், எஞ்சிய அலுவலகங்கள் நிறுவனங்களும் இடம்மாற்றும்வேலைகளை மேற்கொண்டு வருகின்றன. (இ119)

## சர்வோதய இயக்க சிறுவர் பாடசாலை

வட்டுக்கோட்டை, ஜூலை 9
சங்கானையில் சர்வோதய இயக்கத்தினர் சிறுவர் பாடசாலையை ஆரம்பித்துள்ளனர்.

சங்கானையில் உள்ள அகதிகள் முகாமில் இருக்கும் சிறுவர்களின் கல்வியை வளர்க்கும் பெருநோக்குடனேயே இச் சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வியக்கத்தினர் தமது சொந்தச் செலவில் ஆரம்பித்து வைத்த இச்சிறுவர் பாடசாலைக்கு ஆசிரியை ஒருவரையும் நியமித்துள்ளனர்.

அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் சிறுவர்களுக்கு இது பெரும் பயனுள்ளதாக அமைந்துள்ளதென சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு நிர்வாகிகள் சர்வோதய இயக்கத்தினரைப் பாராட்டியுள்ளனர். (இ-1·1)

# உணவுத் தட்டுப்பாடு குடாநாட்டில் இல்லை

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 9
யாழ் குடாநாட்டில் உணவுத்தட்டுப்பாடு இல்லை.

ஜனாதிபதி ஜெயவர்த்தன கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் இப்படித் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டில் உணவுத் தட்டுப்பாடு இருப்பதாகச் சில நாடுகள் கூறுகின்றன.

உணவுப் பொருள்களை அனுப்பிவைப்பதிலும் ஒரு நாடு ஈடுபட்டுள்ளது.

யாழ் குடாநாட்டின் உணவு நிலைமை பற்றி அரசு வாராந்த அறிக்கைகளைப் பெற்று வருகின்றது.

அங்கு தேவையான அரிசி, மா மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உள்ளன.

அப்படியும் அங்கு உணவுப் பொருள்களை அனுப்ப விரும்பும் நாடுகளிடம் இருந்து அவற்றைப் பெற நாம் தயாராக இருக்கின்றோம்.

அதற்கு முதல் நாம் அக்கோரிக்கையை தீவிர பரிசிலனை செய்வோம்.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (உ-எ)

### கடைசியாகத் தெரிவித்த செய்தி என்ன?

கொழும்பு, ஜூலை 9
ஸ்ரீலங்கா அரசு சமர்ப்பிக்கும் புதிய யோசனைகள் தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவையாக இருக்குமானால் மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க இந்திய அரசு தயாராக உள்ளது.

இது தான் கடைசியாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் இந்தியா தெரிவித்திருக்கும் செய்தி ஆகும்.

-இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து இதனையே தெரிவித்தார். (இ-எ)

## வீடு பார்க்கச் சென்றோர் வெயிலில் நிறுத்தப்பட்டனர்

காங்கேசன்துறை, ஜூலை, 9
மாவிட்டபுரம் வீமன்காமம் பகுதிகளுக்கு வீடுகளைப் பார்க்கச் சென்றவர்களை மூன்று மணி நேரமாக நிற்கவைத்த இராணுவத்தினர் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டுள்ளது என்று கூறித் திருப்பி அனுப்பினர்.

திங்கட்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

காலை 8 மணியளவில் சென்ற இப்பொது மக்களின் அடையாளக் காட்டுகள் முதலில் பரிசோதனை செய்யப்பட்டன, பின்பு நண்பகல் 11 மணி வரை அங்கு அவர்கள் வெயிலில் நிற்க வைக்கப்பட்டனர்.

பின்னர் வீடுகளைப் போய்ப்பார்த்து வருமாறு கூறிய இராணுவத்தினர் சில நிமிடத்தில், 'ஊரடங்குச் சட்டம் போடப்பட்டுள்ளது திரும்பிப் போங்கள்' எனக்கூறி அவர்களைத் திருப்பி அனுப்பினர். (இ-68)


# மட்டக்களப்பில் மாணவர் விவரங்களை சி. ஐ. டி சேகரிக்கிறது

கொழும்பு, ஜூலை 9
மட்டக்களப்புப் பகுதியில் உள்ள பாடசாலைகள் சிலவற்றில் கல்வி பயிலும் உயர் வகுப்பு மாணவர்களின் பெயர் மற்றும் விவரங்களை இரகசியப் பொலீஸார் சேகரித்து வருகின்றனர் என்று முறையிடப்பட்டு உள்ளது.

இது பெரும் பரபரப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது.

மட்டக்களப்பு பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்துவின் கவனத்துக்கு இது விஷயம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இரகசியப் பொலீஸ் கோஷ்டி சிருடை தரித்தவர்களின் துணையுடன் சென்றே பெயர், விவரங்கள் சேகரிப்பில் ஈடுபடுகின்றனர் என்று தெரிகின்றது. (உ-எ)




### கேம்பிறிஜ் புலமைப்பரிசில்

பலாலி, ஜூலை 9
தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த திரு. நா. சுகந்தன் என்ற மாணவன் பிரிட்டிஷ் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் புலமைப்பரிசில் பெற்று 'றிப்போஸ்' பொறியியல் நெறி பயிலத் தெரிவாகியுள்ளார்.

கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தால் பயிற்றப்படும் மிகப்புகழ்வாய்ந்த இந்நெறிக்கு இலங்கையைச்சேர்ந்த இம்மாணவன் மட்டுமே தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த 1986 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் பௌதிக விஞ்ஞானத் துறையில் நான்குபாடங்களிலும் அதிவிசேஷ சித்திகள் பெற்று 372 புள்ளிகள் பெற்று அகில இலங்கையிலேயே முதலாவது மாணவனாக இவர் சாதனையை ஏற்படுத்தினர்.

தெல்லிப்பளையைச் சேர்ந்தவரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபருமான திரு. நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனான இவர் ஆரம்பக் கல்வி தொடக்கம் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புவரை யூனியன்கல்லூரியிலேயே கல்விகற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத் தலைவர்களும் நம்பிக்கையாம்

# இந்த ஆண்டில் நீதியான தீர்வு

## தொண்டா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 9
தமிழர் பிரச்சினைக்கு இவ்வாண்டு இறுதிக்குள் நீதியான தீர்வு ஏற்படும் என்று தமிழ் நாட்டில் அரசியல் தலைவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு இரவு கொழும்பு திரும்பிய அமைச்சர் தொண்டமான் கொழும்புச் செய்தியாளர்களிடம் இப்படித் தெரிவித்தார்.

இந்திய அரசு எடுத்து வரும் புதிய முயற்சிகள் தான் அத்தலைவர்களுக்கு இந்த நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளன.

இந்திய அரசு தற்போது எடுத்து வரும் நடவடிக்கைகள் தமிழக மக்களுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது-

- இப்படி அமைச்சர் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

சுமார் பத்துத் தினங்கள் தமிழ்நாட்டில் தங்கி இருந்தபோது அமைச்சர் தொண்டமான் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், அ. தி. மு. க. அமைச்சர் க. ராசாராம் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தி இருந்தார். (உ-எ)

### மகாதேவா தலைமையில் ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 9
அரச கூட்டுத்தாபனங்கள், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றை தனியார் மயப்படுத்துவது பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்ய ஆணைக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இதற்கான அறிவித்தலை விசேடவர்த்தமானியில் வெளியிட்டிருக்கின்றார்.

ஆறு பேர் கொண்ட இந்த ஆணைக்குழுவின் தலைவராக திறை சேரி செயலாளர் திரு. மகாதேவா நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

### கோண்டாவிலில் விவேகானந்தர் நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
சுவாமி விவேகானந்தர் நினைவுதினம் கோண்டாவில் மஞ்சத்தடி கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் ஓய்வு பெற்ற அதிபர் திரு சபா. ஆனந்தர் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற அதிபர் திரு மா. ஆனந்தன் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்து சமயத்தின் முக்கியத்துவத்தை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் சுவாமி விவேகானந்தர்- இப்படி அவர் தனது உரையில் தெரிவித்தார்.

சங்க உபதலைவர் திரு. கா. வைத்தீஸ்வரன் நன்றி சொன்னார் (இ-எ)

# கைப்பற்றிய பகுதிகளை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கிறீர்களா?

## சபையில் லக்ஷ்மன் கேள்வி

கொழும்பு, ஜூலை 9
வடபகுதியில் அரசுப் படைகள் பிடித்துள்ளதாகக் கூறப்படும் பகுதிகள் அவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்தும் உள்ளதா?

அத்தனகலை எம். பி. லக்ஷ்மன் ஜயக்கொடி இப்படி நாடாளுமன்றத்தில் கேட்டார்.

ஆயுதப்படைகள்—பொலீஸ் செலவினத்துக்கு மேலதிகத் தேவைப்படும்180 கோடி ரூபா உபமான்யப் பிரேரணை மீது நடந்த விவாதத்தில் பேசியபோது திரு. ஜயக்கொடி இக் கேள்வியை எழுப்பினர்.

திரு. ஜயக்கொடி மேலும் பேசுகையில் "மலைநாடு பதற்ற நிலைக்கு ஆளாகிவருகின்றது. மலைநாடு குறித்து அரசு அவதானமாக எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்"— என்றும் சொன்னார்.

உபமான்யப் பிரேரணையை அமைச்சர் லலித் அத்துலத் முதலி சமர்ப்பித்தார். (உ-எ)

## அரச அதிபர் அலுவலகங்களில் கடமையாற்றும்கிராமசேவை அதிகாரிகள்பற்றி விவரம் சேகரிப்பு

கொழும்பு, ஜூலை 9
உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், அரச அதிபர் அலுவலகங்களில் பணி புரியும் கிராமசேவை அதிகாரிகள் பற்றிய விவரங்களை அனுப்பி வைக்கும்படி உள்நாட்டமைச்சுச் செயலாளர் சகல அரச அதிபர்களையும் கேட்டிருக்கின்றார்.

செயலகங்களில் பணிபுரியும் கிராமசேவை அதிகாரிகள் 120 மாதங்கள் சேவையாற்றி இருந்தால் அவர்களை இளைப்பாற அனுமதிக்கும்படி அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அப்படி இளைப்பாறும் போது சேவையாற்றிய காலத்துடன் மேலும் பத்து ஆண்டுகள் கூட்டப்படும்.

அப்படி இளைப்பாற விரும்பாத கிராமசேவை அதிகாரிகள் ஒழுங்கு விசாரணைக் குட்படுத்தப் படுவர்.

ஒழுங்கு விசாரணையின் பின் விலக்கப்படாத கிராமசேவை அதிகாரிகள், கிராமசேவகர் பிரிவில் பணிபுரிய நியமிக்கப்படுவர். செயலகங்களில பணிபுரிய அனுமதிக்கப்படமாட்டார்கள்,

அரச அலுவலகங்களில் பணிபுரியும் கிராமசேவை அதிகாரிகள் சில சமூக விரோத, அரச விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று சில எம். பிக்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே உள்நாட்டமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துஇருக்கின்றது. (இ-எ)

### கொட்டில்அமைக்க கிடுகு, மரம்

முள்ளியவளை, ஜூலை 9
விஸ்வமடுவில் இருக்கும் 3ஆயிரத்துக்கு மேற்பட்ட வடமராட்சி அகதிகளுக்கு சிறு கொட்டில்கள் கட்டுவதற்குமுல்லைத்தீவுப் பிரசைகள் குழு கிடுகு மற்றும் மரங்களை வழங்க உள்ளது. 2 ஆயிரம் கிலோ அரிசி, 2 ஆயிரம் கிலோ மா, 25 கிலோ சீனி, பால்மா ஆகிய பொருள்களையும் பிரசைகள் குழு வழங்கியது. (இ 93)

### அகதிகள் புனர்வாழ்வு அமைப்புக் கூட்டம்

வட்டுக்கோட்டை, ஜூலை 9
சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் விசேஷ பொதுக் கூட்டம் இம்மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிஅளவில் சங்கானைப் பட்டினசபை பொது நூலகத்தில் உபதலைவர் திரு. க. வீரசிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-161)

### விண்ணப்பப் படிவம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
1987ஆம் ஆண்டிற்கான முதுகலைமாணி தொடக்கநிலைப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 31-7-87ஆம் திகதிக்கு முன் இப்படிவங்கள் கலைப்பீடாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ)

# இந்தியக்கப்பல்களின் வருகை 20 ஆம் திகதி முடிவடையுமாம்

கொழும்பு, ஜூலை 8
இந்தியாவின் உணவுப் பொருள் விநியோகம் இம்மாதம் 20 ஆந் திகதியுடன் யாழ் குடாநாட்டில் முடிவடைந்துவிடும்

– இப்படி கொழும்பு உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன என்று "தஐலண்ட்" கொழும்பு நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

"ஐலண்ட் பிரைட்" கப்பலைத் தொடர்ந்து நான்கு இந்தியக் கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வரும்.

இம்மாதம் 20 ஆம் திகதியுடன் கப்பல்கள் வருவதும் பொருள்கள் இறக்கப்படுவதும் முடிவடைந்து விடும்.

– இப்படி உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தனவாம்.

தென்மராட்சியில்

# இரண்டாவதுகட்ட உணவுமுத்திரைவழங்க துரிதமான ஏற்பாடு

கொடிகாமம், ஜூலை 9
தென்மராட்சிப் பகுதி வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட உணவு முத்திரைகள் வழங்கும் பொருட்டு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பகுதிக்கு வேண்டிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு உள்ளன.

இதனால் தென்மராட்சியில் சுமார் இருபதாயிரம் குடும்பங்கள் பயனடையவுள்ளன.

இதேவேளையில் இம்முறை ... இப்பகுதியில் மக்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளை உணவு ... திரு. செ. வேலாயுதபிள்ளை துரிதமாக மேற்கொண்டு வருகின்றார்.

### தபால் நிலையத்தில் பெறலாம்

அச்சுவேலி, ஜூலை 9
அச்சுவேலி தபால் நிலையத்தில் மாதாந்த உதவி நன்கொடைப் பணத்தைப் பெற்றுவந்தவர்கள் தொடர்ந்து தமது உதவி நன்கொடையை அச்சுவேலி தபால் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜூன் 29ஆம் திகதி தொடக்கம் அச்சுவேலி இடைக்காடு பகுதி வறிய மக்களுக்கான மாதாந்த உதவி நன்கொடைப் பணம் அச்சுவேலி தபால் நிலையத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

### இடம் பெயர்ந்த 200 மாணவர் அனுமதி

சங்கானை, ஜூலை 9
இராணுவ அனர்த்தங்களுக்கு உள்ளாகி இடம் பெயர்ந்து சங்கானைப் பகுதியில் தஞ்சமடைந்திருக்கும் குடும்பங்களிலுள்ள 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே இடம் பெயர்ந்த இப்பாடசாலையின் மூன்று பெரிய கட்டடங்களில் மக்கள்முகாமிட்டிருப்பதால் மேலும் பல மாணவர்களை அனுமதிக்க முடியவில்லை என பாடசாலை அதிபர் திரு. கா. சந்திரபாலன் தெரிவித்துள்ளார். (இ-ரி)

### வியாபார நிலையங்கள் இடம் பெயர்வு

அச்சுவேலி, ஜூலை 9
அச்சுவேலி பஸ் நிலையச் சுற்றுடலில் அமைந்திருந்த வியாபார நிலையங்கள் பாதுகாப்புக் கருதி இடம்பெயர்கின்றன.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வியாபார நிலையங்களான புடவை வியாபார நிலையம், கட்டடப் பொருள்கள் வியாபார நிலையம் என்பனவும் தங்கம் வைத்தியசாலை உரிமையாளர்களின் மருந்து விற்பனை நிலையமும் ஆவரங்கால் புத்தூர் பகுதிக்குஇடம்மாற்றம்செய்யப்பட்டுள்ளன. (இ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நேர்மையான நல்ல எண்ணத்துடன், எல்லாப் பிராணிகளிடத்தும் அன்புடன் எல்லாருடைய நன்மைக்காகவும் செய்வதே கபடமற்ற தர்மம்.

— சம்பந்தப்பெருமான்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
09.07.1987
த.பெ.இல: - 23


## அவசரமும் அச்சமும்

இந்திய நிவாரணக் கப்பல்கள் யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப் பொருள்கள் கொண்டு வருவது குறித்து கொழும்பில் காரசாரமான கருத்துக்கள் கனல் கக்கப்பட்டிருக்கின்றன. ஆம். செவ்வாய்க்கிழமை நடந்த அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் தொடக்கம் பின்னணி ஆசன எம். பி வரை இந்திய நிவாரண உதவியை கழுகுக் கண்ணோடு நோக்கி உள்ளார்கள்.

இந்திய நிவாரணக் கப்பல்கள் வருவதை நிறுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. அவை காங்கேசன்துறைக்கு வராமல் கொழும்புக்கு வரவேண்டும். நிவாரணப் பொருள்களை இந்திய ஸ்ரீலங்கா அதிகாரிகள் மேற்பார்வையில் விநியோகிக்க வேண்டும்—

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்துக்கு வரத் திட்டமிட்டிருக்கிறது. அங்குவரப்போகும் இராணுவத்தினருக்குத் தேவையான உணவுப் பொருள்களே இப்போது கொண்டு வரப்படுகின்றன— என்றும்

இன்னும் பலவாறாகவும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டன.

கொழும்பு அரசாங்கத்தையும், அதில் அங்கம் வகிக்கும் ஆட்சி நாயகர்களையும் நினைக்க எவருக்கும் சிரிப்பு வரவே செய்யும்.

இந்திய நிவாரணக் கப்பல்கள், தெளிவான வழிமுறைகளை உள்ளடக்கிய ஓர் ஒப்பந்தத்தின் பிரகாரம் இங்கு வந்து போகின்றன. அந்த வழிமுறைகளுக்கு ஸ்ரீலங்கா அரசு இணங்கிக் கைச்சாத்திட்டது. அதில் நிர்ப்பந்தம் அல்லது பலாத்காரம் எதுவும் இருக்கவில்லை.

ஒப்பந்தம் ஒன்றைச் செய்து நடைமுறைப்படுத்தத் தொடங்கிய பின்னர், வழிமுறைகளை மாற்ற வேண்டும் என்று கூக்குரலிடுவது எதையும் தீர்க்கமாகச் சிந்தித்துக் கருமமாற்றும் திறமை ஸ்ரீலங்கா ஆட்சியாளருக்கு சிறிதேனும் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது!

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் போது முட்டாள்களாக இருந்து விட்டோம். இப்போது தான் எமக்குப் புத்தி வந்திருக்கிறது என்ற தமது தகுதியின்மையை வெளிக்காட்டுவதாக அந்தக் கூக்குரல் உள்ளது.

இந்திய நிவாரணப் பொருள்கள் வரத் தொடங்கியதும், வடக்கின் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையை கொழும்பு அரசு தானாகவே உடைக்க வேண்டியதாயிற்று. அதனால் இப்போது முன்னர் கூறிவந்த ''யாழ்ப்பாணத்தில் உணவுத் தட்டுப்பாடு இல்லை'' என்ற பொய்ப்பேச்சுக் குறைந்து விட்டது.

அதனால் வேறு வழிகளால் ஆய்க்கினை கொடுத்து இந்திய நிவாரணத்தை நிறுத்த முயற்சிக்கிறார்கள். அது நடக்குமா? இந்திய ஆட்சியாளர் அப்படி என்ன முட்டாள்கள் என்ற நினைப்பா?

பத்தாயிரம் தொன் உணவுப் பொருள்களை வழங்குவதற்கு இந்தியா உத்தேசித்துள்ளது. இப்போதுதான் மூன்றாவது தடவையாகக்கப்பல் வந்துள்ளது. மூன்றில் ஒரு பகுதி தானும் இன்னும் வந்து சேரவில்லை.

இடை நடுவில் கப்பல்களைக் கொழும்புக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், வேறு மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்றும் கேட்பது சிறிதும் கனவான் தன்மை அற்றது என்பது ஆட்சி நாயகர்களுக்குப் புரியவில்லை!

கனவான் தன்மையற்ற இந்தக் காட்டுக் கூச்சல்களுக்கு உள் மனப்பயமே காரணம்.

உணவுப் பொருள்களை விநியோகிக்கச் செல்லும் இந்திய அதிகாரிகள் வடக்கில் நடந்த அனர்த்தங்களை முழுக்க முழுக்கக் காணும் வாய்ப்பு உண்டு. மக்களின் அவல நிலையை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆகையால் இதுவரை நடந்தது போல தாம், செய்யும் கொடுமைகளையும் செய்து கொண்டு, வெளி உலகத்தை ஏமாற்ற முடியாமற் போய்விடும். நேரில் கண்ட சாட்சி ஒன்று (இந்தியா) இருக்கும்போது பொய்களைப் புனைந்து ஏமாற்று நாடகத்தை உலகத்துக்கு நடத்திக் காட்ட இயலுமா?

தமிழர்களை இன ஒழிப்புச் செய்வதை, தமிழ்ப் பிரதேசத்தை நிர்மூலமாக்குவதை மறைத்து வைக்க முடியாமற் போய்விட்டது. இந்திய அதிகாரிகள் வந்து அனர்த்தங்களைப் பார்த்து விட்டார்கள். தொடர்ந்தும் இதற்கு இடம் கொடுத்தால் முழு உண்மையும் உலகத்துக்கு அம்பலமாகப் போகிறது. இந்த அச்சம் தான் கொழும்பு ஆட்சி நாயகர்களின் காட்டுக் கூச்சலுக்குக் காரணம்.

உண்மையான அந்தக் காரணத்தை வெளிக்காட்டாமல் இந்தியாவை ஆக்கிரமிப்பாளன் என்று காட்டும் விதத்தில் அதனை மாசுபடுத்தும் விதத்தில் அதன் முகத்தில் கரி பூசுவதற்கு முனைகின்றனர். இந்த வேண்டாத அவசரம், உபத்திரவத்தைத் தரும் என்பதை அவர்கள் உணரத் தவறுவது ஏனோ?

# ஹரியானாவில் 34 பயணிகள் சுட்டுக் கொலை!

## படுகொலைகள் நீடிப்பு

சண்டிகார், ஜூலை 8

ஹரியானா மாநிலத்தில் கடந்த செவ்வாய் இரவு சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய இரண்டாவது தாக்குதலில் 34 பஸ் பயணிகள் உயிரிழந்தனர்.

அனைவரும் இந்துக்கள்.

ஒரு ஜீப், ஒரு கார் ஆகியவற்றில் சென்ற சீக்கியத் தீவிரவாதிகள், புதுடில்லி நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை மறித்தனர்.

அந்த பஸ்ஸில் இருந்த பயணிகளில் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அச்சமயம் எதிர்ப்புறமிருந்து வந்த பஸ் ஒன்று அந்த இடத்தில் மறிக்கப்பட்டது.

தீவிரவாதிகள் அந்த பஸ்ஸுக்குள் ஏறி சரமாரியாகச் சுட்டனர். அதில் 30 பேர் உயிரிழந்தனர்.

50க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பஞ்சாப் ஹரியானா மாநிலங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

முழு அளவிலான தேடுதல் வேட்டையில் இராணுவம் உட்பட சகல பாதுகாப்புப் படைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு பஞ்சாப்பில் பஸ் ஒன்றில் சென்று கொண்டிருந்த பயணிகளில் 40 பேரை சுட்டுக் கொன்ற சீக்கியத் தீவிரவாதிகள் கோஷ்டியே இரண்டாவது தாக்குதலையும் நடத்தியிருக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (இ-எ)

## றேகனுடன் ஆலோசிக்கவில்லை என்கிறார் நோர்த்

வாஷிங்டன், ஜூலை 8

ஈரானுக்கு ஆயுதம் விற்றதனால் கிடைத்த லாபத்தை நிக்கரகுவா அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு அனுப்பி வைப்பது குறித்து அதிபர் றேகனுடன் நான் ஆலோசிக்கவே இல்லை.

அமெரிக்க காங்கிரஸ் விசாரணைக் குழுமுன் தோன்றிச் சாட்சியமளிக்கையில் கேர்ணல்ஒலிவர் நோர்த் என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமெரிக்க பாதுகாப்புப்படைத் தலைவராக இருந்த திரு. நோர்த், ஈரான் ஆயுத பேர விவகாரத்தின்முக்கிய புள்ளி ஆவர்.

இவ்விவகாரம் அம்பலத்துக்கு வந்ததைத் தொடர்ந்து கேர்ணல் நோர்த் அதிபர் றேகனால் பதவி விலக்கப்பட்டிருந்தார். (இ-எ)

## இந்திய நாடாளுமன்ற மழைகாலக் கூட்டத் தொடர் 27 ஆம் திகதி ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை 8

இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளின் மழைக்காலக் கூட்டத்தொடர் இம்மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகும்.

ஒரு மாத காலத்துக்கு கூட்டத் தொடர் நீடிக்கும்.

இதனிடையில் இம்மாதம் 13 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் மத்திய அமைச்சரவை மாற்றி அமைக்கப்படும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன,

திரு. அசோக் சென், திரு. வி. பி. சிங், திரு கனிகான் சௌத்ரி ஆகியவர்கள் அமைச்சர் பதவிகளில் இருந்து ராஜினாமாச் செய்து விட்டதனால் ஏற்பட்ட காலி இடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

பிரதமர் காந்தி, தான் தற்போது வகித்து வரு நிதி அமைச்சை தனி அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்க விரும்புகின்றார். (இ-எ)

### வெளி உலகில்

## ஆப்கன் கிளர்ச்சியாளர்களுக்கு பிரிட்டிஷ் ஏவுகணைகள்

### சோவியத் யூனியன் எதிர்ப்பு

மாஸ்கோ, ஜூலை 8

ஆப்கன் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு பிரிட்டனில் தயாரிக்கப்படும் ஏவுகணைகள் வழங்கப்படுகின்றன.

இதற்காக சோவியத் யூனியன் தனது எதிர்ப்பை பிரிட்டனிடம் நேற்றுத் தெரிவித்தது.

இது சம்பந்தமான ஆட்சேபக் கடிதம் மாஸ்கோவில் உள்ள பிரிட்டிஷ் தூதரிடம் ரஷ்ய வெளி நாட்டமைச்சினால் ஒப்படைக்கப்பட்டது.

தனது நாட்டில் தயாரிக்கப்படும் ஏவுகணைகள் ஆப்கன் கிளர்ச்சிக்காரர்களுக்கு வழங்கப்படும் விஷயம் பற்றி பிரிட்டன் பகிரங்கமாகக் கருத்து எதையும் வெளியிடவில்லை.

பிரிட்டனின் செயல், ஆப்கன் மக்களுக்கு எதிரான பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை நடத்துபவர்களுக்குதுணை போவதாக அமைந்திருப்பதாக சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்புவதற்கு எடுக்கப்பட்டு வரும் நல்லெண்ண நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்கும் பிரிட்டனின் செயல் முட்டுக்கட்டையாக இருக்கும்—

இப்படி சோவியத் யூனியன் மேலும் தெரிவித்துள்ளது. (இ-எ)

## அரபாத் டில்லி வருகிறார்

புதுடில்லி, ஜூலை 8

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் இம்மாதம் புதுடில்லி விஜயம்செய்வார்.

பலஸ்தீனப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஐக்கியநாடுகள் சபை ஆதரவிலான சர்வதேச சமாதான மாநாடு ஒன்றைக் கூட்டும் முயற்சிக்கு ஆதரவு தேடுவதே யாஸீர் அரபாத்தின் விஜயத்தின் நோக்கம்—

இப்படி ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு நாள் விஜயத்தில் அரபாத் பிரதமர் காந்தியுடன் விரிவான பேச்சுக்களை நடத்துவார் (இ-எ)

## ராஜ்யசபைக்கு மீண்டும் சிவ்சங்கர்

புதுடில்லி, ஜூலை 8

வர்த்தக அமைச்சர் பி. சிவ்சங்கர் ராஜ்ய சபா உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவிருக்கின்றார்.

அமைச்சர் சிவ்சங்கரின் தற்போதைய ராஜ்ய சபை உறுப்பினர் பதவிக் காலம் முடிவடைகின்றது

குஜராத் மாநில சட்டசபை மூலம் மீண்டும் அவரை ராஜ்ய சபைக்கு அனுப்ப இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு முடிவு செய்திருக்கின்றது, (இ-எ)

# இந்தியா - ஸ்ரீலங்கா மீண்டும் முட்டிக் கொள்ளும் ஆபத்து

> இந்தியாவின் படியிறக்கம்— இத்தலைப்பில் புரொண்ட்லைன் ஜூன் 27- ஜூலை 10 இதழில் வெளியான கட்டுரையின் பிரதானஅம்சங்கள் இங்கு பிரசுரமாகின்றன.
>
> மனோஜ் ஜோஷி புதுடில்லியில் இருந்து இக்கட்டுரையை எழுதியிருக்கின்றார்.

இந்தியர் அறிவிப்பைத் தொடர்ந்து படகுகள் அணி வந்து திரும்பியதும் பின்னர் விமான அணி வந்து உணவுப் பொதிகள் போட்டதும் தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து உணவுப் பொருள்களுடன் கப்பல்களை மேலும் யாழ் அனுப்புவது பற்றி இந்தியத்தூதர் டிக்ஸிற் பேச்சுக்களை கொழும்பு அரசுடன் ஆரம்பித்தார்.

இராணுவ நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்தல் வரையறுக்கப்பட்ட இராணுவ பதில் நடவடிக்கையை இந்தியாவும் மேற்கொள்ளக் கூடும் என்பது பகிரங்கமாக்கப்பட்டது.

எப்படியாயினும் எண்ணியபடி சூடு தணிந்த பின்னர் இந்திய உணவுக் கப்பல்கள் யாழ் வர ஸ்ரீலங்கா சம்மதித்தது.

இரு நாடுகளும் இது சம்பந்தமான உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட்டன.

### இந்தியாவுக்கு பின்னடைவா?

இந்த உடன்பாடு இந்தியாவுக்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவா?

இப்படி ஓர் உடன்பாட்டை இப்போது செய்யமுடியும் என்றால், முன்னரே இதைச் செய்திருக்கலாமே! விமானம் மூலம் உணவுப் பொதிகளைப் போட்டு நிலைமையைப் பெரிதுபடுத்தியிருக்கத் தேவை இல்லையே— இப்படி சிலர் விமர்சிக்கின்றனர்.

விமானமூலம் உணவுப் பொதிகள் போடப்படுவதற்கு முன்னர் ஸ்ரீலங்கா நடந்து கொண்ட விதம் இதை நியாயப்படுத்தாது.

தனது கொள்கை இலக்குகளை அடைய இக் கடுமையான நடவடிக்கையை எடுக்க இந்தியா நிர்ப்பந்திக்கப்பட்டது.

எப்படி இருந்தும் இந்த உடன்பாட்டில் இந்தியா படியிறங்கியதைக் காட்டும் ஷரத்துக்கள் உண்டு.

விநியோகம் பற்றிய சம்மதம் ஸ்ரீலங்காவிடமிருந்து கிடைக்கக்கூடியதாக இருக்கையில் ஸ்ரீலங்கா கடற்படையின் பாதுகாப்புடன் காங்கேசன்துறைக்கு கப்பல் செல்லும் என்பதை வலியுறுத்த வேண்டியது அவசியமானதல்ல.

இப்பணி பற்றிய இந்திய மனோநிலையின் பலம் குறைந்து காணப்பட்டது, உடன்பாட்டில் காணப்பட்ட இரண்டாவது அம்சம்.

வெளிநாட்டு உதவிகளை சில இந்தியப் பிரதிநிதிகள் மேற்பார்வையிடுவது போல் உணவுப் பொருள் விநியோக நடவடிக்கை காணப்படுகின்றது.

எப்படியாயினும் இனப் பிரச்சினை விஷயத்தில் இந்தியாவின் சரியான இலக்குகள் எவை என்பதுதான் பெரிய கேள்விக்குறியாக உள்ளது.

இனமோதலின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்குத் தான் இந்தியா முதலிடம் கொடுத்திருக்கிறது.

நிவாரணப் பொருள்கள் விநியோகம் எவ்வளவு பெரிய மனிதாபிமான நடவடிக்கையாக இருப்பினும் இந்தியா நினைக்கும் அடிப்படை பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு உதவாது.

### டிச. 19 யோசனை

ஸ்ரீலங்காவின் ஒருமைப்பாட்டைக் கேள்விக்குரியதாக்கும் எந்தத் தீர்வையும் இந்தியா திணிக்காது—இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி போன்ற இந்தியத் தலைவர்கள் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றனர்.

எப்படியாயினும், டிச 19 யோசனைகள், இறு

(4ஆம் பக்கம் பார்க்க

> நயினை நாகபூஷணி குறித்துப் புதிய திடுக் டும் ஆராய்ச்சித் தகவல். அது என்ன...?
>
> நாளைய உதயனில் படியுங்கள்.

## நாகம்மாளே ஆதரித்தாளுமம்மா!

அலைகடல் நடுவே அமர்ந்த மீனாட்சி
அருள்தருங் காஞ்சியன்னை காமாட்சி
மலைமகளே விசாலாட்சி யுன் மாட்சி
மறந்திடப்போமோ மணிபல்லவத்தேவி!

★ ★ ★ ★

கண் ஒளி இழந்தோர் மற்றும்
கர்மநோய் உற்றோர் வாழ்வில்
புண் ணுளப் பட்டோர் நொந்தே
புலம்பிடப் புனர்வாழ் வீய்வாய்!

★ ★ ★ ★

புண்ணிய திருத்தலப் பெருமை தோய்ந்த
செம்மையும் தேரும் கால
வண்மையும் வளமும் முற்றாய் வாய்ந்த
மணி திகழ் நாகம்மாளே!

★ ★ ★ ★

நின்பெருமை யாரறிவார் பாரில்
அகிலவருட் சீர்பெருகு சித்திரங்கள்மிக்க
அழகமைந்த தேரினிலே அருளீயவரும்தாயே
அவதிப்படுகின்றோம் ஆதரித்தாளுமம்மா!

திருமதி. காவேரி யோகநாதன்

[இன்று நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழா. அதனையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.]



### பொய்யாமொழி

குறள்:
சிறுபடையான் செல்லிடம் சேரின்
உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.

பொருள்:
சிறிய படை உடையவனுக்குத் தக்கதாக உள்ள இடத்தில் [illegible] நின்றால், பெரியபடை உடையவன் தன் ஊக்கம் அழிவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விசித்திரம்

''உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்...''

ஓ! முரளி வந்திட்டீ ராக்கும். என்ன அங்கிள் தத்துவப் பாட்டெல்லாம் பாடுறீர். இந்த வயதிலை உதுகளைப் பாடிக்கொண்டிருந்தால்... எண்டு நீ மனதுக்குள்ளை வைச்சுக் குடையிறது எனக்குப் புரியுது?

அந்தப் பாட்டைக் கொஞ்சம் மாத்தினால் என்ன எண்டு நான் யோசிக்கிறேன்.

''உள் ஒண்டு நடக்க வெளி ஒண்டு காட்டுவார் உலுத்தர் கோன்கள்'' எண்டு மாறிப் பாடினா காலத்துக்கு ஏத்த மாதிரி இருக்கும் போலை இருக்கு.

மட்டக்களப்பிலை களுவாஞ்சிக்குடி எண்ட இடத்திலை கோயிலுக்குப் போன தமிழர்களை அதிரடிப் படையினர் சண்டித்தனமாய் சுட்டுக்கொன்றதாக வந்த செய்தியள் பிழை எண்டும் அப்பிடி ஒண்டும் நடக்கயில்லை எண்டும் ''மீடியா சென்ரர்'' அறிவிச்சுது.

உயர் அதிகாரியைக் கொண்ட விசாரணைக் குழு ஒண்டு அங்கை போய் விசாரிச்சதிலை அப்பிடி ஒண்டும் நடக்கயில்லை எண்டும் அந்தக் குழுவிலை இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரியும் இருந்ததாயும் அதே ''சென்ரர்'' அறிக்கைவிட்டதாக ரூபவாஹினி அறிவிச்சுது.

ஆனால் மட்டக்களப்புக்குப் போன இந்திய அதிகாரிக்கு நடந்தது வேறு. அவர் பிரசைகள் குழுப் பிரமுகர்களோடு சென்று சுயேச்சையாய்ப் பாக்க விரும்பினார். ஆனால் அதுக்கு அவை விடயில்லை.

உந்தத் தந்திரத்தைத் தான் அவை எல்லா இடங்களிலும் கடைப்பிடிக்கிறது வெளியாள் எவரும் விஷயத்தை அறிய விரும்பி சம்பந்தப்பட்ட பகுதியிலை இருக்கிற பிரமுகர்கள் அல்லது பொதுமக்களை நாடினால், இராமண்ணை யாரும் உடனை அருகிலை போய் விடுவினம்.

அவையை வைச்சுக் கொண்டு பிரமுகரோ பொதுமக்களோ எப்பிடி உண்மையான சம்பவத்தை அல்லது நிலையை எடுத்துச் சொல்லுவினம், சொல்லமுடியும்?

வடமராட்சியிலை 'ஒப்பறேஷன் லிபறேஷன்' நடந்து முடிஞ்சதோடை ஹெலிக்கொப்டர், ஹெலிக்கொப்டராய் வெளிநாட்டுச் செய்தியாளரை 'அரேஞ்ச்ட் ரூரிலை' கொண்டு வந்து குவிச்சினம்.

தங்கடை அநியாய அக்கிரமங்களை மறைச்சு, தங்கடை வெற்றியை வெளிக்காட்டக் கூடிய தாய் அவையைக் கூட்டித் திரிஞ்சினம். அதுக்குள்ளை யாரும் ஒரு செய்தியாளர் உண்மையை அறிய முனைஞ்சு ஒரு பிரமுகரை அல்லது பொதுமகனை நெருங்கியதும் நாலைஞ்சு சிப்பாய்களும் உடனை அங்கை கூட்டம் போடுவினமாம்.

உண்மையை மாற்றிப் பொய்யாக்கிச் சொல்லுறது போதாது எண்டு, உண்மை வெளியாலை போகாமலும் காத்துக் கொள்ளுகினம். றொம்பக் கெட்டிக்காரர்! எப்பிடியோ ஒரு நாளைக்கு உண்மை அம்பலமாகும் எண்டதை மறந்து போகினம்!

உடும்பன் குளத்திலை நூற்றுக்கும் மேற்பட்ட தமிழரை வைக்கோற் போர்களுக்குள்ளை போட்டு எரிச்ச படுகொலையையும் இல்லையெண்டு தானே உவை சொன்னவை நாங்கள் உதயனிலையே எரியுண்ட சடலங்களைப் படம் பிடிச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கு
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

09-07-1987 வியாழக்கிழமை

ராஜ் கோபால்ஸ்
(தற்காலிக இடமாற்றம், மயூரா சென்ரர் உட்புறம்)
திருமண வைபவங்களுக்கேற்ற
பட்டுப் பிடவைகளைப்
பெற்றுக்கொள்ளலாம்.
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அதிபர் சிவராசாவுக்கு அஞ்சலி:—

# கல்விப் பாதிப்பை சர்வதேச மட்டத்தில் பகிரங்கமாக்கவேண்டும்

## கல்விப் பணிப்பாளர் சொல்கிறார்

காங்கேசன்துறை, ஜூலை 9

"அதிபர் சிவராசாவின் மறைவு கல்வித் துறையில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. இப்படியான கொலைகள் மேலும் ஏற்படாதிருக்க மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வேன். அத்துடன் இது விடயத்தை சர்வதேச மட்டத்திலும் பகிரங்கப்படுத்த வேண்டும். அதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் முயல வேண்டும்"

—இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர், வீமன்காமம் மகா வித்தியாலய அதிபரும் அப்பகுதி பிரசைகள் குழுபிரமுகருமான திரு. எம். சிவராசாவின் மறைவையொட்டி மல்லாகம் இந்துக்கல்லூரியில் நடந்த அஞ்சலி வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது:-

1974-ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தான் இன்றைய புரட்சிக்கு காரணமாக அமைந்தது. அதன் பின்பே விடுதலை வீரர்களும் தோன்றினார்கள்.

இவ்வாறு படுகொலைகள் தொடர நாம் இனியும் இடமளிக்கக்கூடாது.

அப்பாவி மக்களை — அவர்களது சொத்துக்களை — உயிர்களை — அழித்த இராணுவம் இப்போது கல்வியிலும் கை வைத்துள்ளது. பல பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன. பல பாடசாலைகள் இயங்கவில்லை.

பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. — என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசுகையில் —

இன்று பல்வேறு வகைகளில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என கஷ்டங்கள் தொடர்ந்து கொண்டே உள்ளன.

இதைக் கேட்டு தப்பி ஓடுகிறோமே தவிர அதைத் தடுக்கும் திராணி இல்லாதிருக்கிறோம். இந்த அதிபரின் கொலை இக்கட்டான சூழ்நிலையில் தமிழினம் கையாலாகாத நிலையில் உள்ளது என்பதை உணர்த்தியுள்ளது. இனியும் இப்படியான நிலைக்கு வழிவிடலாகாது — என்றார்.

பேராசிரியர் திரு. சந்திரசேகரம், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா, திரு. சொக்கன் உட்படப் பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள்.

அளவெட்டியில் அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக மல்லாகம் இந்துக் கல்லூரிக்கு பூதவுடல் எடுத்து வரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. (உ-86)

## பிரேமதாஸ இன்று பிரிட்டன் பயணம்

### ஜப்பானுக்கும் செல்வார்

கொழும்பு, ஜூலை 9

பிரதமர் பிரேமதாஸ இன்று வியாழன் பிரிட்டன், ஜப்பான் நாடுகளுக்கான இரண்டு வார கால பயணத்தை மேற்கொள்கின்றார்.

முதலில் பிரிட்டன் செல்லும் பிரதமர், பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தாட்சருடன் பேச்சுக்கள் நடத்துவார்.

பிரைட்டனில் சர்வதேச சிற்பிகள் காங்கிரஸ் மாநாட்டை அவர் தொடக்கி வைப்பார்.

ஜப்பானுக்குச் செல்லும் பிரதமர் பிரேமதாஸ இம்மாதம் 21-ஆம் திகதி மனிதக் குடியிருப்பு அதிகாரிகள் மாநாட்டைத் தொடக்கி வைப்பார்.

ஜப்பான் பிரதமருடனும் அவர் பேச்சுக்களை நடத்துவார். (உ-எ)

## 293 சடலங்கள் மீட்பு

லுஸாக்கா, ஜூலை 9

ஸாம்பியாவின் வடபகுதி ஆறு ஒன்றில் மிதக்கும் பாதை ஒன்று கவிழ்ந்ததில் உயிரிழந்தவர்களில் 293 பேரின் சடலங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் 200 பேர் வரையில் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துச் சமயத்தின் போது சுமார் 500 பயணிகள் பாதையில் பயணஞ்செய்தனர். வார இறுதியில் இவ்விபத்து இடம்பெற்றது. (உ-எ)

## மண்டானிலும் மோதல்

வடமராட்சி, ஜூலை 9

மண்டான் இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியேறிய ஐம்பதுக்கும் அதிகமான இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தாக்கி திருப்பி அனுப்பினர்.

கவச வாகனங்கள் சகிதம் சிப்பாய்கள் வெளியேற முற்பட்ட போது புலிகள் நவீனரக ஆயுதங்கள் கொண்டு எதிர்த் தாக்குதல் நிகழ்த்தினர். (உ-160

## பொன்னாடை போர்த்தல்

காங்கேசன்துறை, ஜூலை 9

பழம்பெரும் நாதஸ்வர வித்துவான் இணுவையூர் என். ஆர். கோவிந்தசாமியின் கலைச் சேவையைப் பாராட்டி உடுவிலில் இன்று பொன்னாடை போர்த்து பட்டமளித்து அவரைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

சிவஞான வாரியத்தின் அனுசரணையுடன் நடக்கும் இவ் விழாவில் பலர் பாராட்டுரை வழங்குவர். (உ-68)

## ஹர்த்தால்

புதுடில்லி, ஜூலை 9

ஹரியானா மற்றும் பஞ்சாபில் 3 சம்பவங்களில் 72 பஸ் பயணிகள் கொல்லப்பட்டதை கண்டித்து பாரதீய ஜனதாக் கட்சி நேற்று புதுடில்லியில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

வடக்கு மாநிலங்கள் பலவற்றில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தியோர் உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கையும், பிரதமர் ராஜீவ் காந்தியையும் பதவி விலக்கக்கோரி அவர்களது வாசஸ்தலத்தை நோக்கிச்சென்றனர்.

அவர்களைப் பொலீஸார் தடுத்தபோது அசம்பாவிதங்கள் நிகழ்ந்தன. (உ)

## புறப்பட்டது

சென்னை, ஜூலை 9

எண்ணூறு தொன் உணவுப் பொருள்களுடன் 'ஐலண்ட் பிரைட்' கப்பல் சென்னைத் துறைமுகத்தில் இருந்து நேற்றுக்காலை 7-30 மணி அளவில் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது.

## பெற்றோல் பவுஸரின் அனர்த்தம்

பொன், ஜூலை 9

செவ்வாயன்று மேற்கு ஜேர்மனியில் சிறிய நகரம் ஒன்றின் ஐஸ் கிரீம் கடைக்குள் பெற்றோல் பவுஸர் ஒன்று புகுந்து கொண்டதால் ஏற்பட்ட விபத்தில் 50 க்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

விபத்து ஏற்பட்ட போது பவுஸரில் 32 ஆயிரம் லீற்றர் பெற்றோல் இருந்தது.

பவுஸர் வெடித்துப் பெற்றோல் தண்ணீர் குழாய்களுக்குள் புகுந்ததால் அவை வெடித்து 14 கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன.

பவுஸர் சாரதி தப்பி விட்டார். கட்டுக்கடங்காமல் சென்று கடைக்குள் பவுஸர் மோதியது என்று அவர் சொன்னார்.

அப்பட்டினத்தில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. (உ-எ)

## இந்தியா-----

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

தித் தீர்வு காணுவதற்கு நடத்தப்படும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நல்லதொரு அடிப்படையாக இருக்கும் என்றே அவர்கள் கருதுகின்றனர்.

டிச. 19 யோசனைகளை இந்தியாவும் ஸ்ரீலங்காவும் சேர்ந்து தயாரித்தன. பின்னர் இந்த யோசனைகளில் இருந்து ஸ்ரீலங்கா பின்வாங்கியது. தொடர்ந்து இந்தியா மத்தியஸ்தப் பணியில் இருந்து விலகிக் கொண்டது.

தரையிலும் அவ்வளவு நடமாட்டம் காணப்படவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தன்னால் முடியும் என்று ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்தால் மட்டுமே ஏதாவது சம்பவங்கள் தரையில் இடம்பெறலாம் என்று தர்க்க ரீதியாக எண்ணலாம்.

கடைசியாக நடந்து கொண்ட விதத்தை வைத்துப் பார்த்தால் ஸ்ரீலங்காவின் உத்தியின் வரையறை என்ன என்பது தெரிந்ததே.

இதன் அடிப்படையில் இந்தியாவும் ஸ்ரீலங்காவும் மீண்டும் முட்டிக் கொண்டாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

(முற்றும்)

## வித்தாரம் - - -

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சுப் போட்டிருந்தோம். மறந்து போனியே?

★ ★ ★

நெல்லியடித் தாக்குதலுக்கு முன்னம் வடமராட்சியிலை நம்மடை ஆட்களிலை பலருக்குப் போராளியள் பூசை குடுத்ததாய் தகவல்கள் வந்திச்சுது.

சிப்பாய்கள் குடுக்கிற நகைகளுக்காக பலபேர் போராளியளின்ரை நடமாட்டத்தைப் பற்றித் தகவல் குடுத்தவையாம்.

சிலபேர் இராமண்ணைமாருக்கு குடியும் வேறு சில "வைஸ்"ஸுகளும் ஏற்பாடு செய்து குடுத்து நகையள் வாங்கினவையாம்.

அவை எல்லாரையும் இனங்கண்டு போராளியள் நல்ல பூசை குடுத்தினமாம்.

உந்த இராமண்ணைமாருக்கு அப்பிடி எங்காலை உந்த அளவு நகை வந்தது எண்டதுதான் துப்புத்துலக்க வேண்டிய விஷயம்......!

தென்னிலடி

## குடாநாடு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரணம் வழங்க 4 கோடி ரூபா பயன்படுத்தப்படும்.

கந்தளாய் - ஹபரணை வீதிப் பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர்த்த 3 கோடி ரூபா செலவிடப்படும்.

-இப்படி அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்தார்.

உபமான்யப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (உ-எ)

## தொடர்ந்து .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

ப்பு தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

கண்காணிப்பு நடவடிக்கையில் தொய்வு ஏற்பட இடம் கொடுக்கக் கூடாது.

காங்கேசன்துறையில் இறக்கப்பட்டுவரும் இந்தியாவின் நிவாரண உணவுப் பொருள்கள் கடுமையாகச் சோதிக்கப்படுவது இல்லை.

இனி இப்படி 'சான்ஸ்' எடுக்க முடியாது.

இந்திய உணவுப் பொருள்கள் இனி நன்கு பரிசோதனை செய்யப்படவேண்டும்.

தென்இந்தியாவில் கப்பலில் இந்த உணவுப் பொருள்கள் ஏற்றப் படும்போது ஸ்ரீலங்கா அரசு அதிகாரி சோதனையிடுகிறார்.

காங்கேசன் துறை துறைமுகத்திலும் பாதுகாப்பை இனி இறுக்க வேண்டும் என்று அவதானிகள் நம்புகின்றனர்

'இப்படி 'டெய்லி நியூஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## தேடுதல்..

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

போது பத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். மற்றும் பலர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது பாடசாலை ஒன்றினுள் இருந்த பத்துக்கும் அதிகமான பொதுமக்களைச் சிப்பாய்கள் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் பெண்களும் குழந்தைகளும் அடங்குகின்றனர்.

இதேவேளை இத்தாக்குதலில் காயமடைந்த பல பொதுமக்கள் வைத்தியசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

செவ்வாய்க்கிழமை தேடுதலின் போது பல இளைஞர்களும் சிப்பாய்களினால் கைது செய்யப்பட்டதாகவும் அவர்களில் சிலர் திருகோணமலைக் கோட்டை இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

(அ-உ-10)

## தேடுதலுக்கு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கின்றனர்.

இதேவேளை முகமூடி மனிதர்களும் ஹெலிக் கொப்டரில் அழைத்து வரப்பட்டு நகரின் கேந்திர இடங்களில் நிறுத்தப்படுகின்றனர்.

இராணுவத்தினர் நகருக்குள் நடமாடும்போது ஹெலிக்கொப்டர்கள் மிகவும் தாழப் பறந்து வட்டமிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## ஸ்ரீலங்கா . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை மேற்கொள்ளவோ, பிரசைகள் குழு பிரதிநிதிகளைச் சந்திக்கவோ கப்டன் குப்தா அனுமதிக்கப்படவில்லை.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்தவர்களை பார்க்க கப்டன் குப்தா முயன்றபோது, தாங்களும்கூடவர வேண்டும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த இடத்துக்கு கப்டன் குப்தாவைக் கூட்டிச் சென்ற பாதுகாப்பு அதிகாரிகளே, அங்கு இருந்த ஒரு தமிழரின் வாக்குமூலத்தை மட்டும் திரு. குப்தாவுக்கு மொழி பெயர்த்துத் தெரிவித்தனர்.

இதன் காரணமாக ஸ்ரீலங்கா அரசு விடுக்கும் எந்த அழைப்புக்கும் இந்திய அரசு செவிசாய்க்காது.

- இப்படி தூதர் திரு. டிக்ஸிற் தெரிவித்தார். (உ-எ)

தெல்லிப்பழை பல நோ. கூ. சங்கம்
பிற்மன் ஆங்கிலச்
சுருக்கெழுத்து/தட்டெழுத்து பரீட்சை

பிற்மன் (லண்டன்) பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளதால் எமது பரீட்சை நிலையத்தின் மூலம் விண்ணப்பித்தவர்கள் அனைவரும் தற்போது துர்க்கை அம்மன் ஆலயத்தருகில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் எதிர்வரும் 13.07 87 திங்கட்கிழமை மாலை 2 மணிக்குப் பின்னர் சந்திக்கவும்
தலைவர் (1272)
8-7-87. தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 09-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Thursday July 09, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

ஷப்ரு யுனிக்கோ
பினன்ஸ் லிமிடெட் வழங்கும்

நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 14 % |
| 6 மாதங்கள் | — | 16 % |
| 12 மாதங்கள் | 16% | 18 % |
| 24 மாதங்கள் | 18% | 20% |
| 36 மாதங்கள் | 20% | 22% |

★ நிதி உதவி!
★ வைப்பிடுகளுக்கு உயர்ந்த வட்டி
★ சேமிப்பை பெருக்க புதிய வழி
★ வட்டியைப் பணமாகவும் (Cash) பெற்றுக் கொள்ளலாம்.







நிதித் துறையில் நாணயம் மிக்க நண்பன்
ஷப்ரு

இயக்குநர் சபை:-
எஸ். பாலசுப்பிரமணியம் A. I. B. (Lon), ஜே. டி. நவரட்ணம் A. I. B. (Lon), வி. பி. ச. கருணரட்ன (சட்டத்தரணி), ஆர். பாலசுப்பிரமணியம், ஓ. வி. எா. ஜேசன் பரீ- B. A.

யாழ். முகவர்:-
230, நாவலர் வீதி,
[இலுப்பையடிச் சந்தி]
யாழ்ப்பாணம்.

மானிப்பாய் முகவர்:-
184, யாழ் - மானிப்பாய் வீதி,
[இலங்கை வங்கி கட்டடத்திற்கு அருகில்]
மானிப்பாய்.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

ஷப்ரு நிதி நிறுவனம்

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4.
தொலைபேசி:- 589310, 500576.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org